# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>
## ஊடக அறிக்கை

****************************

**<u>கொவிட்-19க்கு எதிரான யுத்தத்தில் முன்னணியிலிருந்து தலைமை தாங்கும் இந்தியா</u>**

இந்தியாவின் தேசிய அளவிலான கொவிட்-19 தடுப்பூசி பயணத்தினை 2021 ஜனவரி 16ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மெய்நிகர் மாநாடு மூலமாக அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். முதல் கட்டமாக இந்தியா முழுவதிலும் உள்ள முன்னரங்க நிகழ்ச்சித்திட்ட பணியாளர்கள் மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த ஊழியர்கள் 30 மில்லியன்பேருக்கு இந்த தடுப்பூசி வழங்கப்படுவதுடன் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் மிகவும் பாரிய தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டமாகவும் இது அமைகின்றது. தொடர்ந்து இரண்டாம் கட்டத்தின் மூலம் 300 மில்லியன் பேருக்கு இந்த தடுப்பூசியை வழங்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இரண்டாவது கட்டத்தின் போது முதியவர்கள் மற்றும் பாரிய நோய் தாக்கத்தினை கொண்டிருப்பவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

2. இந்த தடுப்பூசி திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் 3006 சேவை மையங்கள் மெய்நிகர் வழிமுறைகள் ஊடாக இணைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு சேவை மையத்திலும் கிட்டத்தட்ட 100 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. சுதேசிய முறைப்படி அபிவிருத்தி செய்யப்பட்ட டிஜிட்டல் இணைய கட்டமைப்பான கோ-வின் (Co-WIN) மூலமாக இந்த பாரிய தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்துக்கு உந்துசக்தி வழங்கப்படுகிறது. இந்த இணையத்தளம் ஊடாக தடுப்பூசிகளின் இருப்பு, களஞ்சியத்தின் வெப்பநிலை, தடுப்பூசியினை பெற்றுக் கொண்டவர்களின் நிலை ஆகியவற்றினை கண்காணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் நாள் முழுவதும் இயங்கும் தொலைபேசி அழைப்பு நிலையம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இதனூடாக இந்த தடுப்பூசி தொடர்பான சகல முகாமைத்துவ பணிகளையும் மேற்கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

3. அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கொவிட் 19ஐ எதிர்கொள்ள இந்திய அரசாங்கம் மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பாக குறிப்பிட்டிருந்தார். 2020 ஜனவரி 17 ஆம் திகதி

இந்தியா கொவிட்19 குறித்த தனது முதலாவது அறிவித்தலை விடுத்திருந்தது. அத்துடன் முதலாவதாக விமான நிலையங்களில் பயணிகளை பரிசோதனை செய்ய ஆரம்பித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்தியாவில் உள்ள பரிசோதிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் ஊடாக இந்த இந்திய தடுப்பூசி உருவாக்கப்பட்டுள்ளது. இப் பெரு நோய்க்கு எதிரான போராட்டத்தில் இந்த தடுப்பூசிகள் ஓர் உறுதியான வெற்றியினை இந்தியாவுக்கு பெற்றுத்தரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

***************

கொழும்பு

16 ஜனவரி 2021